**இந்திய உயர் ஸ்தானிகராலயம்**

**கொழும்பு**

**************

**ஊடக அறிக்கை**

தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சர் கௌரவ திலங்க சுமதிபால அவர்களும் பதில் இந்திய உயர் ஸ்தானிகர் வினோத் கே ஜேக்கப் அவர்களும் இணைந்து நான்காவது இந்திய கல்வி கண்காட்சி - 2020 ஐ கடந்த சனிக்கிழமை (01) கொழும்பில் ஆரம்பித்து வைத்தனர்.

இந்நிகழ்வில் உரை நிகழ்த்திய பதில் உயர் ஸ்தானிகர் ஜேக்கப் அவர்கள் , கல்வித்துறையில் இந்தியா-இலங்கை இடையிலான ஒத்துழைப்பை மேலும் ஆழமாக்குவதற்கான சாத்தியங்களை சுட்டிக்காட்டினார் . ஒவ்வொரு ஆண்டும் இந்திய கல்வி நிறுவனங்களில் வெளிநாட்டு மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்ட 25,000 க்கும் அதிகமான இடங்களை பயன்படுத்துமாறு அவர் இலங்கை மாணவர்களை ஊக்கப்படுத்தியிருந்தார். அத்துடன் பட்டப்படிப்பு , பட்டமேற்படிப்பு மற்றும் கலாநிதி கற்கைநெறிகளுக்காக இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களுக்கு இந்திய அரசு ஒவ்வொரு ஆண்டும் 750 புலமைப்பரிசில்களை வழங்குகிறது. மேலும் ITEC திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 400 இலங்கை அரச அதிகாரிகளுக்கு திறன் மேம்பாட்டுக்கான முழு நிதியுதவியுடனான பயிற்சி வாய்ப்புகளை இந்தியா வழங்குகிறது. இந்திய - இலங்கை மன்றத்தின்கீழ் நடைபெறும் மாணவர் பரிமாற்றங்கள் இத்திட்டங்களில் ஒரு முக்கிய அம்சமாகும், மேலும் இருதரப்பினருக்கும் இடையிலான கலாசார உறவை மேம்படுத்தவும் அத்திட்டம் உதவுகிறது . கல்வி உட்கட்டமைப்பு விடயங்களில் காணப்பட்ட சமீபத்திய அபிவிருத்திகளாக , ருஹுண பல்கலைக்கழகத்தில் இலங்கை பல்கலைக்கழகங்களில் மிகப்பெரிய கேட்போர் கூடத்தை இந்தியா நிர்மாணித்தது . அத்துடன் ருஹுண பல்கலைக்கழகத்தின் மருந்தியல் ,தாதி மற்றும் மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞான துறைகளில் சிறந்த பெறுபேற்றினை பெறும் மாணவர்களுக்கு இந்திய உயர் ஸ்தானிகர் தங்கப்பதக்கங்கள் நிறுவப்பட்டதுடன் அவற்றை வருடாந்தம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டது . இந்த ஆண்டு ஜனவரி நடுப்பகுதியில் , வடக்கு மாகாணத்தில் ஐந்து பாடசாலைகளில் இந்திய உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட கட்டடங்கள் சம நேரத்தில் இலங்கை மக்களிடம் கையளிக்கப்பட்டன.

இலங்கையில் ஹிந்தி மொழி வளர்ச்சிக்கு , முன்னோடியான பங்களிப்பினை வழங்கியமைக்காக 2020 ஜனவரி 26 அன்று இந்திய அரசால் கௌரவம் மிக்க பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்ட மறைந்த பேராசிரியர் இந்திரா தசநாயக்கே அவர்களின் அர்ப்பணிப்பு மற்றும் ஆர்வத்துடன் இன்றைய இளம் மாணவர்களும் கல்வியை தொடரவேண்டுமென பதில் உயர் ஸ்தானிகர் ஜேக்கப் அவர்கள் மாணவர்களை ஊக்குவித்திருந்தார்.

*****

கொழும்பு
03 பெப்ரவரி 2020